**கட்டான பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டான பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கட்டான பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.1(அ), 1.2.2(அ), (ஆ), 1.2.4, 1.2.5(ஆ)(i), 1.2.5 (இ), 3.1.1 மற்றுமை 3.3.1(ஆ)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்திற்கான FS 5 குறிப்பு இலக்கம் 3.4 இன் பிரகாரம் மாற்றல்களான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வருமானம் அவை தேறியவிடத்து இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 15,000,000 கூட்டுத்தொகையான நீதிமன்ற தண்டப்பணம் | கணக்கீட்டு கொள்கை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்துக்காக அட்டுறு அடிப்படை சரியாக இருத்தல் வேண்டும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டு ரூபா 49,770,581 தொகை அட்டுறுவாக காணப்பட்டமையினால் அப்பெறுமதியால் வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியம இலக்கம் 18.7 மற்றும் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் சபையின் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிரதேச சபையின் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நியமம் 3.5 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மீளாய்வாண்டு முதல் நிலையான சொத்துக்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான மொத்த பெறுமதி ரூபா 647,755,973 ஆன நிலையான சொத்துக்கள் காணி, கட்டிடம், பொறிகள் மற்றும் இயந்திரம், தளபாடமும் பொருத்திகளும், மோட்டார் வாகனங்கள், ஏனைய உபகரணங்கள் மற்றும் நூலக புத்தகங்களாக மாத்திரம் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | சொத்து வகையின் பிரகாரம் வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நியமங்களில் குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான உரிய படிவங்களின் பிரகாரம் வட்டி செலுத்துதல், விரிவான வருமானக் கூற்றில் நிதிக் கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வட்டி செலுத்துதல்கள் ரூபா 1,054,025 தொகை நிர்வாக செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,860,000 தொகையான | தாமத வழுக்களினால் நிர்வாக செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் கடன் தவணைப் பணம் செலுத்துதல் நிதிக் கிரயத்தின் கீழ் காண்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் தவணைப் பணம் செலுத்துதல்கள் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் நிதிக் கிரயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | நியம இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானியங்களின் பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக கழித்து சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாமல் மானியத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் கிடைக்கப் பெற்ற ரூபா 116,301,876 நிதிஏற்பாட்டு தொகையும் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் சேமிப்பாக எந்தவொரு தொகையும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை . | 2021 ஆம் ஆண்டில் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நியமங்களில் குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான மாதிரிப் படிவங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 05 மற்றும் 10 தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நியம இலக்கம் 6.11 இன் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய சகல நிலையான சொத்துக்களும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணிகள் தவிர சகல நிலையான சொத்துக்களையும் பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | நியம இலக்கம் 11.10 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு எதிராக தொடரப்பட்ட 05 வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்துவதற்குள்ள கட்டணம் இறுதிக் கணக்கில் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு கொள்கையின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வெளிவாரி நிதியுதவிகளில் உடன்படிக்கை செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 120,722,018 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 6,353,445 தொகை நிலையான சொத்தாகவும், பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 57,187,573 தொகை நடைமுறை வேலையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நியமங்களை பேணி விரிவான விடயங்களை உள்ளடக்கி EG 3.2 இன் பிரகாரம் மீதிகள் மற்றும் அலகுகள் மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதி விடயங்கள், ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் வேறுபாடுகள் கணக்கீட்டு குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 51,081,887 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் வடிகாண்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான சகல வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் ரூபா 647,755,973 மீதி, தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்படாமல் ஆண்டின் இறுதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றின் காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய பெறுமதிக்கு ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பெறுமதி சேர்க்கப்படுமிடத்து ஆண்டின் இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பெறுமதி சமமாக இருக்க வேண்டிய போதிலும் சபை தயாரித்திருத்திருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 291,331,835 வேறுபாடு காணப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 135,371,148 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | ஒரு கணக்கு விடயத்தில் தாமத வழுக்களினால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 02 கணக்கு விடயங்களையும் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2019 திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 215/8 ஆம் இலக்க பிரதேச சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதிகளில் 7 ஆவது பிரிவு | 2019 திசெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 60 கையடக்கத் தொலைபேசி சிம்காட் பத்திரங்கள் பதவியணியின் 60 பேர்களுக்காக வழங்கப்பட்டு 2020 திசெம்பர் 24 ஆந் திகதி வரையான பட்டியலுக்காக ரூபா 105,393 தொகை சபை நிதியத்திலிருந்து சட்டத்திற்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் போது தலைவரின் முன்மொழிவில் சிம்காட் பத்திரங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததென அறியத்தருகின்றோம். | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 220,682,923 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட விஞ்சிய வருமானம் ரூபா 170,504,415 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 35,023,471 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலுவையில் அறவிடப்பட்ட பணம் ரூபா 12,702,542 மாத்திரம் ஆகும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2020 மார்ச் மாதம் திகதியின்றிய பீ/எல்/7/1/8/1/பொது ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான நிதியத்தின் மூலம் இலவசமாக பொருட்களை வழங்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது பிரதேசத்தின் மக்களுக்கு மரக்கறி பொதிகள் இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,954,454 செலவிடப்பட்டிருந்தது. சபையின் சகல உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் கருத்தில் கொள்ளப்பட்டு மிகவும் சிறந்த திட்டமொன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் யூன் 01 ஆந் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழுவின் அநேக அங்கத்தவர்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தி 2020 யூன் 12 ஆந் திகதி சபையினால் அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்காத போதும் அதில் 06 உறுதிச்சீட்டுக்களின் பெறுமதியான ரூபா 909,620 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திகதியின்றிய கடிதம் 2020 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் விநியோகிக்கப் பட்டமையால் அதுவரையில் சபை மரக்கறிகளையும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்தியிருந்ததை அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கைகளுக்கு இணங்க வேண்டியிருந்த துடன் கொடுப்பனவு களுக்காக சபை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆடிஅம்பலம இல் அமைந்துள்ள வல்பொலவத்த காணியில் பொதுச் செயற்பாடுகளுக்காக பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 28 பேர்ச் நிலக் கூறு உரித்துறுதி மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. அதன் உரித்து மற்றும் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஏற்பாடுகள் | உரிய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படாமையின் காரணமாக அந்த நிலப் பகுதியில் 2.65 பேர்ச் அளவு நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வீட்டின் ஒரு பகுதி மற்றும் எல்லை மதில் அத்திவாரம் மூலம் அனுமதியற்ற பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. 2020 யூலை 01 ஆந் திகதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் காணி உரித்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரியதாக சபையினால் கோரப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 68,327,779 தொகை பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டு மீள கையளிக்கப் படாதிருந்தமையால் அந்த காரணங்களை சரிசெய்து மீண்டும் சமர்ப்பிக்கப்படுமாயின் கொடுப்பனவுகளை செய்ய முடியுமாக இருந்ததாக மேல் மாகாண இறைவரி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய சரிசெய்தல்களை மேற்கொண்டு அந்த முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சபைக்குரிய வருமானங்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |